**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.135/2019**

PW1 – ஜெகபர்சாதிக், த/பெ முகமது ஏகையா
நாள்–14.02.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை :**

வழக்கு சொத்து செம்மங்குடி கிராமம், வில்வராயன் நத்ததில் அமைந்துள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தும் அதன் அருகில் உள்ள சொத்துக்களும் ஆதிதிராவிட மக்களுக்காக அரசால் கைப்பற்றப்பட்டு மனைகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை நான் சம்மந்தம் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். சம்மந்தம் என்பவர் செம்மங்குடி கிராமம் அம்பேத்கர் காலனியில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்து சம்மந்ததிற்கு 2019–ல் அரசால் ஒப்படைவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஒப்படைவு செய்யப்பட்ட 10 ஆண்டுகளுக்குள் விற்பனை செய்ததால் அந்த விற்பனையானது செல்லாது என்றால் சரியல்ல. நான் சம்மந்தமிடமிருந்து கிரயம் பெற்றதும் செல்லாது என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.1–ல் இணைக்கப்பட்டுள்ள நத்தம் நிலவரி திட்ட துாய அடங்கல் பதிவேட்டின் அடிப்படையில்தான் வா.சா.ஆ.1 ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி நத்தம் நிலவரி திட்ட துாய அடங்கல் பதிவேடானது மண்டல துணை வட்டாட்சியாரால் சான்றொப்பம் இடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வில்வராயன் நத்தம் கிராமத்தில் நத்தம் நிலவரி திட்டத்தின் கீழ்தான் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். எனவே நத்தம் நிலவரி திட்ட வட்டாட்சியர்தான் சான்றொப்பம் இடவேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 இணைப்பட்டுள்ள நத்தம் நிலவரி திட்ட துாய அடங்கலானது மோசடியாக பெறப்பட்டது என்றால் சரியல்ல.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.